சிவமயம்

REGISTERED AS NEWSPAPERINA GEYLON
P. M. G. NO. H. A. 119/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ௫௬] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ மார்கழி மீ ௧௧ உ (1947 டிசெம்பர் 26 வெள்ளிக்கிழமை) [ இல ௭௨

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

## 1949-இல்

### சீமந்துத் தொழிற்சாலை

அரசாங்கத்தாரால் வைத்து நடத்தப்படும் தொழிற்சாலைகளைப் பற்றி அரசாங்கம் ஓர் அறிக்கையை இப்போது வெளியிட்டிருக்கிறது. அதிற் பின்வருமாறு காணப்படுகிறது.

பல பெரிய தொழிற்சாலைகளை நிறுவ அரசாங்கம் திட்டம் வகுத்த போதிலும், அவற்றுள் காங்கேசன்துறைச் சீமந்துத் தொழிற்சாலை வேலைதான் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமான வேலைகள் எல்லாம் தீவிரமாக நடைபெறுகின்றன. 1949-ம் ஆண்டின் முற்பகுதியிலே இத்தொழிற்சாலை வேலை பூர்த்தியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"இத் தொழிற்சாலைக்கு 85 இலட்சம் ரூபா செலவேற்படும் என்று முன்னர்க் கணிக்கப்பட்டது. ஆனால் யந்திரங்கள் மூதலாம் பொருள்களின் விலையேற்றத்தினால் இத்தொகை போதாது என்று இப்போது தெரிகிறது. ஆகவே, இன்னும் கூடிய பணத்தை அரசாங்கம், பாராளு மன்றத்திடம் பெறும்.

"இந்தத் தொழிற்சாலைமூலம் ஒரு லட்சம் தொன் சீமெந்து உற்பத்தியாக்க முடியும், புறநாட்டுச் சீமெந்திலும் பார்க்க மலிந்த விலையில் இதனை விற்கவும் முடியும்."

## பென்ஷன் வேண்டும்

### யாழ்ப்பாணத் தொழிலாளர் கோரிக்கை

கள் இறக்கும் தொழிலாளர்க்குப் பென்ஷன் கொடுக்க வேண்டும் என்ற ஓர் தீர்மானம் சென்ற வாரம் கூடிய வடஇலங்கைத் தொழிலாளர் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சங்கத்து அங்கத்தவர்கள் கள் இறக்கும் தொழிலாளர் ஆவர்.

பல இடங்களிலும் சேர்க்கும் கள்ளை, ஓரிடத்துக்குக் கொண்டு வந்து விற்பனை செய்ய அநுமதிக்க வேண்டும், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள் என்பவற்றுக்குச் சமீபமாகவும் கள் இறக்க அநுமதி வழங்க வேண்டும்; யாழ்ப்பாணத்திலே சாராயம் வடிக்கும் ஓர் தொழிற்சாலை நிறுவுதல் வேண்டும்; மதுபரிபாலனப் பகுதித் தலைமை யதிகாரியின் அறிக்கையைத் தமிழிலும், சிங்களத்திலும் பிரசுரிக்கவேண்டும், மதுபரிபாலனப்பகுதியில் லஞ்சம் வாங்குதல் முதலிய கொடிய வழக்கங்களைப் பற்றி விசாரணைபுரிய வேண்டும், உள்நாட்டு மந்திரி, அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, இங்குள்ள நிலைமையை நேரே அறிதல் வேண்டும், என்பன மேற்படி தொழிலாளர் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாகும் மிஸ்ரர். ஏ. பி. தம்பையா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

## நாம் யார்?

கவிராஜ பண்டிதர். நா. கனகராஜையர் B. O. L.

(முற்றொடர்)

வீடுகட்ட விரும்பும் ஒருவன் பணம் எல்லாம் செலவிட்டாலும் தானே மண்ணை வெட்டிச் சுவர் அமைப்பதில்லை. மரத்தை அறுக்கத் தானே போவது இல்லை. கல்லைச் செம்மைசெய்யத்தானே நடப்பதில்லை. பலதிறப்பணிகளையும் பலர் செய்ய அதனால் விளைந்த பயனைத் தான் கட்டிய வீடாகவே கூறிக்கொள்கிறான். பானையைத் தான் வனையவில்லை, அடுப்பைத் தான் அமைக்கவில்லை, நெல்லைத் தான் அறுக்கவில்லை, அரிசியைத் தான் குத்தி எடுத்து வரவில்லை. ஆக்கிய சோறு தன்செயலாகவே தன் வயிற்றுக்கு வந்ததே என்று எண்ணுகிறார். இங்ஙனமே ஆலயத்தின் கறபணி இவன் செய்யவில்லை. தோட்டம் இவன் அமைக்கவில்லை. சிற்பங்களைச் சித்திரங்களை இவன் கைவருந்தி அமைக்கவில்லை. தெய்வத் திருவுருவம் இவன் பிறக்க எத்தனை காலங்களின் முன்பு அங்கு வந்ததோ, இவன் பாட்டனுக்கே தெரியாது. மற்றப் பணிகளையெல்லாம் மற்ற மக்கள் செய்யும்போது பார்த்து அவைகளைத் தன் தனைவராக எண்ணி மகிழும் இவன் ஆலய வழிபாடு என்ற பணியில் அதற்கெனவே பயிற்சிபெற்ற ஒருவன் முன்னின்றால் அதற்காகமனம் வருந்துவது எதற்காக? அவனைப் போக்கிவிடுவது பெரிய காரியமில்லை. பல்லாயிரம் பணம் விலைபெற்ற நகைகள் ஆலயங்களுக்கு உண்டு. அவற்றைத் தெய்வத் திருவுருவத்தில் அணிந்து விழாக் கொண்டாடவேண்டுமென்று பண்டித பாமரராகிய அனைவரும் விரும்புவது உண்டு அந்தத் தொழிலைப் பழகிய ஒருவன் வேண்டாமா? எல்லாரும் எல்லாத் தொழிலும்செய்ய இயலும் என்பது வாயளவிற் பேசலாமே ஒழியக் காரியத்தில் ஆகுமா! புலவா கல்லறுக்க முடியுமா? தட்டான் மண்சுமக்க முடியுமா? உழவன் பொற்பணி செய்ய இயலுமா? இவை எல்லாம் இயலும் காலம் வரும்போது பூசாரிக் கூட்டத்தையும் ஒழித்துத் தலை முழுகிவிடலாம். அந்தக்காலம் வரும்வரை அதற்காகப் பயிற்சிபெற்ற சிலர் இருக்கத்தானே வேண்டும்.

ஒரு சிறு இடத்திலே தெய்வத் திருவுருவத்தை வைத்து வழிபடுவதற்காக ஸ்ரீரங்கம், மதுரை, இராமேசுரம் என்ற பெருந்தலங்களில் உள்ள பெருங் கோயில்கள் இத்தனை மண்டபங்களோடும் இத்தனை தூண்களோடும் எழவேண்டுமா? இத்தனை திருவிழாக்கள் எதற்காக? இந்த வழிகளிலே செலவாகும் பணத்தையெல்லாம் உலகத்தில் உணவுக்கும் உடைக்கும் அல்லற்படும் மக்களுக்கு உதவும்படி செலவிடக்கூடாதா? பிறந்த குழந்தைகள் வயிற்றுக்கு வேண்டியளவு பால் கிடைக்காமல் சாகும் நாட்டிலே இத்தனை பாற்குடங்கள் ஏன் விக்கிரகங்களின்மேற் கொட்டவேண்டும்? இப்படிக் கேள்விகளும் எழுகின்றன. இவற்றையெல்லாம் அந்த நன்மக்களை முன்னிலையில் வைத்து நேரிலே அவர்கள் மனம் ஏற்றுக்கொள்ளும் சமாதானங்களைக் கூறினால் அன்றிப் பயன் இல்லை. வாடுகின்ற இலைகளைப் பார்த்த கருணைமூர்த்தி அந்த இலையைத் தாங்கிய செடியையோ, கொடியையோ, தேடிப்போய் அதன் வேரிலே தண்ணீர் விடுகின்றான். அப்படியேயெல்லாமாய் அல்லவுமாகிய இறைவனுக்கு அபிடேகமாகிய பால் உலகவுயிர்க்கு எல்லாம் பயன்படும் என்ற உண்மையைக் கண்ட ஒருவனே அங்ஙனம் செய்வான். தேனை ஊற்றுகின்றோம், பழச்சாறுகளை ஊற்றுகின்றோம். பாலும் நீரும் எண்ணெயும் நெய்யும் ஊற்றுகின்றோம். வெறுங்கல் என்று நினைக்கும் ஒன்றில் சிலவற்றைச் சிலநாள் ஊற்றினால் அது என்னபாடு படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இறைவன் உருவம் என்று நம்பும் சிலையில் எத்தனை தேன் அருவி விழுந்தாலும் அது தாங்கும் பெருமையை உற்றறியும் அறிவு எல்லார்க்கும் வாய்ப்பதில்லை.

நம் முன்னோர் நமக்கென வைத்த வழியில் நம்பிக்கை இல்லை என்று கூறும் நம் இனத்தவரை நம் அயலார் இழுத்து அழைக்கு முன்னே நம் இனத்தில் நல்ல நம்பிக்கை உள்ளவராகச் செய்ய நம்மால் இயன்ற நற்பணி யெல்லாம் புரிய வேண்டும். தெய்வ வுணர்ச்சியிலே உண்மை யுரைக்கும் நற்கருத்துக்களை எவருக்கும் மறைக்காமல் உணர்த்த வேண்டும், நம் இனத்திலே தோன்றுயுள்ள குறைகளை அயலார் ஒன்றுக்குப் பத்தாக நிறுகப் பேசினாலும் நாம் அவைகளை அறிந்து குறைகளா குணங்களா என்று நிச்சயிக்கு முன்னே ஒன்றும் பேசக்கூடாது, நம் தமரே நமக்குப் பகையாக நின்றாலும் அன்பால் நாம் அவரை வசப்படுத்த வேண்டும். எவரையும் வெறுப்பதும் அருவருப்பதும் ஒதுக்குவதும் தாழ்த்துவதும் மதத்தின் நெறிக்கு உகந்ததாகாது.

இங்ஙனம் நல்ல நோக்கம் கடைப்பிடித்து நாம் சில காலமாவது வாழ்ந்தால் அயலாரும் நம்மை வணங்கி வாழ்த்துவர், நம்மிடம் குற்றமே காணும் குண முடையாரும் நம் குணத்தை அறிந்து போற்றுவரும். இறைவன் அருளை எதற்கும் வேண்டும்.

## யாழ்ப்பாணத்தில் தண்ணீர்வசதி

### வெகு சீக்கிரத்தில் ஏற்படுத்த முயற்சி

சென்ற சனிக்கிழமை யன்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில், நகரசுகாதார வைத்தியர் டக்ரர் எஸ் வி. துரைராஜாவுக்கு அளித்த பிரிவுபசாரக் கூட்டத்தின்போது, நகரசபைத் தலைவர் திரு. க. பொன்னம்பலம் யாழ்ப்பாண மக்களுக்குத் தண்ணீர்வசதி தருவது பற்றியும், இப்போது நகரசபை அறவிடும் ஆனவரி போதாதென்றும் கூறினார். அவர் கூறியதன் சாரம் வருமாறு:—

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் நல்லதண்ணீர்ப்பஞ்சம் உண்டு. உதாரணமாகப் பட்டினப்பகுதியில் நல்லதண்ணீர் கிடைப்பது அரிது. இந்தக் கேவலநிலைமையைப்போக்கி, ஊரவர்களுக்கு நல்லதண்ணீர் உதவ அரசாங்கம் முயற்சிசெய்யவேண்டுமென்ற கிளர்ச்சி 125 வருஷகாலமாக இங்கே நிகழ்ந்து, இப்போது தான் பயன்கிடைக்கும் நிலைமையில் இருக்கிறது. யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு நல்லதண்ணீரைக் குழாய் மூலம் உதவ அரசாங்கம் ஓர் திட்டம் வகுத்து இருக்கிறது.

இருபாலையிலிருந்து கோண்டாவிலுக்குப்போகும் தெருவுக்கு அணித்தாக 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலமொன்றை அரசாங்கம் வாங்கியிருக்கிறது. இதில் தேவையான கிணறுகள் தோண்டப்படும். இக்கிணற்றுக்களில் இருந்து தண்ணீர், பெரிய தண்ணீர்த் தேக்கங்களில் மின்சாரம் மூலமாகத் [illegible] தேக்கங்களிலிருந்து குழாய்மூலமாக கரையூர், சீதாரி, பெரியகடைப்பகுதி, சோனகதெரு, கொட்டடி முதலாம் இடங்களுக்குத் தண்ணீர் உதவப்படும்.

குறித்த திட்டத்தை நிறைவேற்றுதற்குக் கேள்விப் பத்திரங்கள் இப்போதுதான் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம யாழ்ப்பாணம் நகரசபை ஆராய்ந்து ஓர் முடிவுகண்டபின், இத்திட்டம் சம்பந்தமான வேலை ஆரம்பிக்கப்படும்.

இனி, யாழ்ப்பாணப்பட்டினத்தில் ஏனைய வசதியீனங்கள் உண்டு என ஊரவர்கள் குறைசொல்லுகிறார்கள். தெருக்கள் நிலமடைந்து கிடக்கின்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஹு
மார்சழி ௧௧ உ வெள்ளிக்கிழமை


## மழையில்லா மாரி

இந்த யாழ்ப்பாணத்திலே, மாரிக்கால மென்று சொல்லப்படும் புரட்டாசி தொடக்கம் மார்கழிவரையிலுள்ள மாசங்கள் இந்தவருடம், வழக்கம்போற் பெருமழை பெய்தலின்றி மிகவும் அற்ப மழையோடு கழிதலாயின. இங்குள்ள நடுவயசோடு கூடிய மக்கள் மாத்திரமல்லாமல், காலங்கண்ட முதியோரை வினவியபோது, அம்முதியோரும், மாமறிய இப்படி மழையில்லா மாரிக் காலத்தை, அதிலும் ஐப்பசி கார்த்திகையிற் பெருமழை பெய்து வெள்ளம் பெருகுதலின்றி, அற்பத்திலும் அற்பமான மழை தூறிய காலத்தை, தங்கள் அனுபவத்தில் முன்னர்க் கண்டதில்லையென்று சொல்லுகிறார்கள்; ஆறில்லா நாடாகிய இந்த யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலே, மழை பெய்ய வேண்டிய காலத்திற் பெய்யாதொழிந்தால், அதனால் வருந் தீமை எப்படிப்பட்டதென்பதை இங்குள்ளார் தம் அநுபவத்தில் அறிவர்; இலங்கையின் ஏனைய பாகங்களிற் பெருமழையும், அதனால் வெள்ளப் பெருக்கும், அவ்வெள்ளப்பெருக்கினற் பேரனர்த்தங்களும் நேர, இந்த யாழ்ப்பாணத்தில் அப்படியான அநர்த்தங்கள் நேராமையையிட்டு நாம் மகிழலா மெனினும் காலமழையின்றி மிக அற்ப மழை பெய்ததே யென்பதையிட்டு இங்குள்ள மக்கள் வருந்தாதிருத்தல் முடியாது.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" என்ற பிரகாரம் இந்த ஆண்டிலே மழை பெய்யாமையினல் இங்கே நெல்விளைவு குன்றி இங்குள்ள மக்கள் இந்த அரிசி நெற் கட்டுப்பாட்டுக் காலத்திலே பெரிதும் பஞ்சப்படவேண்டி நேருமேயென அஞ்சக்கிடக்கின்றது. இப்படிக் காலமழை பெய்யாமைக்குக் காரணம் பலவற்றை ஒவ்வொரு சாதியினரும் தேசத்தினரும் மதத்தினரும் சொல்வார்கள்; ஆனற் சைவ மக்களாகிய நாங்கள் மழை தெய்வத்தாலாவதென்றும், முன்னவனர்கோயிற்பூசைகள் முட்டுற்றாலும், அந்தண ரொழுக்கமும் அரசநீதியும் மாதர்நெறியும் தவறினலும், தருமங்குன்றி அதர்மந் தலைப்பட்டாலும் வாரிவளங் குன்றுமென்ற கொள்கை பூண்டுள்ளோம்; இவ் விபரீதங்களினற் காலமழை பெய்யத் தவறுவதோடு, அகாலமழை பெருவெள்ளம் முதலியவற்றினல்நாட்டிற்குப் பெரும் அநர்த்த முண்டாகுமெனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

காலமழை பெய்யாமைக்குக் காரணமாகவுள்ளவாகிய முன்னவனர்கோயிற் பூசைகள் முட்டுப்படுதல், அக்கிரமம் முதலியன இந்த யாழ்ப்பாணத்திலே இப்பொழுது அதிகப்படலாயின; ஆனல் அவற்றை விபரமாக எடுத்துக் காட்டப் புகுதல் இந்நேரத்திற் புத்தியாகாது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளரென் றிருப்போருட் பெரும்பாலார் தாம்தாம் செய்ய வேண்டிய கடமைகளி னின்றுந் திறம்பியதனற் காலந்தோறும் மழை குன்றலாயிற் றென்றேனும், அகாலமழையும் அதனல் அநர்த்தங்களும் நேரத் தலைப்பட்டுக்கொண்டன என்றேனும் கொள்ளுதல் தவறுகாது. இவைகளை இங்குள்ள நாற்பாற் குலத்தாரும் சிந்தித்து இயன்றவரையில் அறநெறியில் ஒழுக முயன்றால் மழைபெய்யும். நாற்பாற் குலத்தினருள் அரசரென இப்பொழுது நாங் கொள்வது நாட்டின் பரிபாலனத்தில்ஈடுபட்டுள்ள அதிகாரிகளையாம்.

மழையில்லாமையும் அதனற் பஞ்சமுண்டாதலும், அவைகாரணமாக மககள் இடர்ப்படுதலுமாகிய இவைகள் முந்தியும் நேர்ந்துள்ளன வென்பது சரித்திரவாயில்களாக அறிதலாகும்; அதனற்றன் எங்கள் சமய குரவர்களும், துறவிகள் தாமும், புலவர்களும் மழை பெய்யவேண்டுமென இறைவனை வழுத்திப் பாடியிருக்கின்றார்கள்

> எங்கோமா னன்பர்க்கு
> முன்னிடவ ணமக்கு
> முன்சுரக்கு மின்னருளே
> என்னப் பொழியாய்
> மழையேலோ ரெம்பாய்.

என மாணிக்கவாசக சுவாமிகளும் பாடியருளினர்.

முற்காலத்திலே மகாஞானிகள் அடியவர்கள் புலவர்கள் கற்புடைநல்லார் என்னுமிவர்கள் இருந்தமையினற், கோளகளின் நிலை மாறுதல் காரணமாக மழைகுன்ற நேர்ந்தவிடத்தும், மேலே சொல்லப்பட்ட பெரியார் மழைபெய்யச் செய்தனர்; ''நல்லாரொருவருளரேல் அவர்பொருட்டு, எல்லார்க்கும் பெய்யும் மழை" யென்ற வாக்கும் இக்காரணம்பற்றியே யெழுந்ததாகும். ஆனல், இக்காலத்தில் மழைபெய்யா தொழிந்தாற் செய்வதென்ன?

●

## சுதேச வைத்தியம்

ஆயுர்வேத, சித்த, யூநாநி என்றும் சுதேச வைத்தியத்தை எவ்வாறு புனருத்தாரணம் செய்து, அவற்றின் மூலம் நாட்டு மக்களுக்குக் கூடிய பணி செய்யலாம் என்பதை விசாரணை புரிந்து அறிவிக்கும்படி நியமிக்கப்பட்ட விசாரணைச்சபை தனது அறிக்கையை இப்போது வெளியிட்டு விட்டது. இந்த அறிக்கையிற் காணப்பட்டுள்ள சிபார்சுகளை உடனே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசாங்கத்தை நாம் கேட்டுக் கொள்ளுகிறேம்.

சுதேச வைத்திய விசாரணைச்சபை செய்துள்ள சிபார்சுகளில் மிகவும் பிரதானமானது சுதேசவைத்தியரை மேற்பார்வை செய்ய வேண்டுமென்பதேயாகும். புராதனமான ஆயுர்வேத சித்த வைத்தியமுறைகள், ஓர்சில கற்றுக்குட்டிகளாலும் மருத்துவமுறையைப் [illegible] ளாலும், மி[illegible] ஆழ்ந்து, அந்நியருடைய இழிசொல்லுக்கும் அகப்படவேண்டி யேற்பட்டது என்பது மறுக்கொணு உண்மை. இந்தக் கேவல நிலைமை மாறவேண்டுமானல், கற்றுக்குட்டி வைத்தியர்க்கு இடமிருக்கவே கூடாது. எனவே, இவ்விஷயமாக வைத்திய விசாரணைச் சபையினர் விடுததுள்ள சிபாரிசினை, சுதேச வைத்திய வளர்ச்சியில் ஊக்கமுடைய எவரும் வரவேற்கத்தான் செய்வர்.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும், முறையேஓர் ஆயுர்வேத கல்லூரியும் சித்தவைத்தியககல்லூரியும ஆவசியகம் அமைக்கப்படல்வேண்டும்என்றும் இந்தக் கல்லூரிகளுக்குத் தொடர்பாகச் சிறந்த ஆயுர்வேத சித்த வைத்தியசாலைகள் சகல நவீனவசதிகளுடனே இன்னே நிறுவப்படுதல் வேண்டும் எனறும் குறித்த விசாரணைச் சபையினர் சிபாரிசுசெய்துளளனர். இப்போது கொழும்பு ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில அளிக்கப்படும் பயிற்சிமுறை தூரமானது. அதனைமாற்றிக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இரு கல்லூரிகள் [illegible]க்கப்பட வேண்டும என்று இங்குள்ளார் பன்னெடுங் காலமாக அரசாங்கத்தைக் கேட்டு வந்தனர். வர்களின் கேள்விநியாயமானதே என்பதை விசாரணைச்சபை ஒப்புக்கொண்டு அதற் கிணங்கச் சிபாரிசு செய்திருப்பது குறிப்பிடத் தக்கது.

விசாரணைச் சபைகளை நியமிப்பதும் அச்சபைகள் அறிக்கைகள் விடுவதும் மிகவும் சுலபம். ஆனல் அவ்வறிக்கைகளின்படி நடப்பதுதான் கஷ்டம். எமது இலங்கை யரசாங்கம் தனது வழக்கமான வழாவழாக் கொள்கையைத்தான், இந்தச் சுதேச வைத்திய விசாரணைச்சபை யறிக்கை விஷயத்திலும் கைக்கொள்ளப் போகின்றதா? அல்லது, அவ்வறிக்கையிற் கண்டுள்ள ஆலோசனைப் பிரகாரம் இன்னே கருமம் ஆற்றப் போகிறதா என்பதுதான் இன்றைய கேள்வி. நாம் மிகவும் சீக்கிரத்திற் சுதந்திரம் அடைய இருக்கிறேம். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே, எங்கள் நாட்டில், எங்கள் புராதனமான சிறந்த சுதேசவைத்திய முறைகள் இனியும் தேடுவாரற்றுக் கிடத்தல் முறையாகாது. மந்திரி பண்டாரநாயககா இவ் விஷயத்தில் கூடிய சிரத்தை எடுத்து ஆகவேண்டியவற்றை ஆற்றுவார் என்று எதிர் பார்க்கிறேம்.

# குறிப்புக்கள்

### வரி ஏற்றம்?

இந்த நகரத்தில் வதியும் மக்கள் தமக்குத் தெருக்கள் சரியில்லை, ஒழுங்கைகள் சுகநியோடு கூடியதாய்ப் போக்குவரத்துச் செய்ய முடியாமலிருக்கிறது; நகரசுத்திவேலை ஒழுங்காக நடைபெறவில்லையென் றெல்லாம குறை சொல்லுகிறார்கள். ஆனல், இத்தகைய கைங்கரியங்களை எல்லாம் திறம்படச் செய்வதற்குப் பணம் வேண்டும. நகரசபையிடம் போதிய பணம் இல்லை; ஆகவே வரியைக் கூட்டவேண்டு மென்னும கருத்துப்பட நகரசபைத் தலைவர் திரு. பொன்னம்பலம் அன்று நகர மண்டபக் கூட்ட மொன்றிற் கூறினர். வரியை அதிகரிக்க முயற்சி செய்யமுன், நகரசபைத் தலைவரும் அவரது சகாக்களான நகரசபை அங்கத்தவர்களும், நகரத்துக் கைங்கரியங்களைப் பங்கப்படுத்தாத முறையில், சிக்கனத்தைக் கடைப்பிடித்துத் தம்பரிபாலனத்தை நடாத்திவருகின்றனர் என்பதற்கு என்ன உத்தரவாதம்என்று நாம் கேட்கிறேம். நகரசபையின் வருமானத்தில் மிகப் பெரும் பகுதியை, நகர சங்கத்தில் உத்தியோக வர்க்கமே விழுங்கிவிடுகிறது என்பது உண்மைதானே? ஒருவர் ஆற்றக்கூடிய வேலையை 10 பேர் இந்த நகரசபையில் ஆற்றி, வரியிறுப்போர் வளத்தை விழுங்கி ஏப்பமிடுகின்றனர் என்ற அபவாதத்துக்கு ஆதாரமுண்டா? புதுவரிகளை விதிக்க நிச்சயிக்கமுன், திரு பொன்னம்பலம் இதுபோன்ற கேள்விகளுக்குத் திருப்திகரமான விடையளிக்க வேண்டும்.

### நகரசபைத் தலைவர்

சென்றவாரம் யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் நிகழ்ந்தஓர் கூட்டத்தில், நகரசபைத் தலைவர் திரு. க. பொன்னம்பல மவர்கள் இம்மாகாணத் தலைவர் விஷயமாக ஓர் அபவாதத்தைச் சுமத்தினர். மிஸ்ரர் ஹட்சன் சென்ற பாராளுமன்றத் தேர்தற் காலத்திலே பட்சபாதகமாக நடந்தார் என்றும், குறித்த ஓர் கட்சிக்கே ஆதரவாக நின்றார் என்றும் திரு பொன்னம்பலம் குற்றஞ் சாட்டினர். மாகாணத்தலைவர் திரு. ஹட்சன், நகரசபைத் தலைவரைப் போல இப்படியான விஷயங்களில் பகிரங்கமாக வாய்திறக்கும் பாக்கியமுடையவராக இப்போது இருக்கவில்லை. எனவே அவர் நிலையை இட்டு நாம் அநுதாபப்படுகின்றேம். ஆனல், திரு பொன்னம்பலத்தின குற்றச்சாட்டு எவ்வளவுதூரம் உண்மை என்பதை அறிய ஊரவர்கள் ஆவலுடன் இருக்கிறார்கள். பொறுப்புவாய்ந்த ஓர் நகரசபைத் தலைவர் இத்தகைய குற்றம் சுமத்துவதற்கு ஏதும் ஆதாரம் இருக்கத்தான வேண்டும் என்பதே எமது சித்தாந்தம். ஆனல் தேர்தல் முடிந்து பல நாட்களாகிவிட்டன. அக் காலத்திலேயே — மாகாணத்தலைவர் பட்சபாதகமாக நடந்தார் என்ற அக்காலத்திலேயே, நகரசபைத் தலைவர் அவ் விஷயத்தைப் பகிரங்கமாக்கி நடவடிக்கை எடுத்திருந்தால், எவ்வளவோ நலமாயிருந்திருக்கும். அத்தகைய நடவடிக்கை எதையும ஸ்ரீ பொன்னம்பலம் அப்போது எடுத்தாரா?

### நல்ல ஆலோசனை

இலங்கை சுயராச்சியம் அடையும் நன்னாளைக் குதூகலமாகக் கொண்டாடுவதுசம்பந்தமாக அத்தினத்தை யொட்டிய சிலநாட்களுக்கு இந்த நாட்டில் மிருகவதை செய்யக்கூடாது என்று வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. கனகரத்தினம் அவர்கள் இலங்கை யரசாங்கத்துக்கு ஓர் ஆலோசனையைச் சமர்ப்பித் திருக்கிறார். இந்த ஆலோசனையை ஏற்றுக் கொஞ்ச நாட்களுக்காவது அஹிம்சா மூர்த்தி புத்தரின போதனைகளைக் கைக்கொள்ளும் இந்த நாட்டிலே கொல்லா விரதமே விரதம் என்ற உயரிய கொள்கையைக் கடைப் பிடிக்கும் ஹிந்துக்கள் வாழும் இந்நாட்டிலே உயிர்க்கொலையைத் தவிர்த்துக் கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும. ஸ்ரீ கனகரத்தினத்தின் ஆலோசனையை ஏற்று அதன்படி செய்வததில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நட்டமும ஏற்படமாட்டாது. பர்மா சுதந்திரமடைவதையொட்டி அங்கே சில தினங்களுக்கு உயிர்க்கொலை சட்டர்வமாக நிறுத்தப்படும். எதிர்க் கட்சியில் உள்ள அங்கத்தவர் இந்த ஆலோசனையைக் கூறுகிறபடியால் அதனை ஏற்றுக்கொள்ளவொண்ணுது என்ற குறுகிய மனப்பான்மைக்கிடங் கொடுக்காமற் பிரதமர் சேனநாயக்கா இவ்விஷயமாக ஆவன செய்வாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# ராணுவத்தில் மகத்தான மாற்றம்

## எல்லா அதிகாரிகளும் இனி இந்தியரே

இப்போது இந்திய இராணுவத்தின் பிரதம தளபதியாக சேர். ரூடலொக ஹாட் என்பவர் இருக்கிறார். இன்னும் பல பிரதான பதவிகளில் பிரிட்டிஷாரே இருக்கின்றனர். இந்திய இராணுவத்தில் இப்படியான நிலைமை இனியும் இருக்க விடாமல், முழுவதையும் தேசியமயமாக்க, இந்திய அரசாங்கம் ஓர் திட்டம் வகுத்திருக்கிறது. அதன்படி வருகிற ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் இந்திய அரசாங்கத்தில் உள்ள சகல உத்தியோகத்தரும் அதிகாரிகளும் இந்தியராகவே இருப்பர். பிரதம சேனாதிபதியும் இந்தியராகவே இருப்பர். அநேகமாக ஸ்ரீ ஜுத். காரியப்பாவே சேனாதிபதியாக இருப்பார் என்று யூகிக்கப்படுகிறது. இராணுவத்தைத் தேசியமயமாக்கியும், சில பிரிட்டிஷ் உத்தியோகத்தர்களும், அமெரிக்க அதிகாரிகளும் இராணுவ ஆலோசகராக இருப்பர்.

○

### காங்கிரஸ் காரிய நிர்வாகசபை

காங்கிரஸ் தலைவராக பாபு ராஜேந்திர பிரஸாத் தெரிவு செய்யப்பட்டும் அவர் இதுவரை தனது காரியநிர்வாகசபையை நியமிக்கவில்லை. ஆனால் அச்சபையினர் கூடிய சீக்கிரம் நியமிக்கப்படலாம். வங்காள மாகாணக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜுத் எஸ். எம். கோஷ், பம்பாய் மாகாணக் காங்கிரஸ்தலைவர் ஸ்ரீ ஜுத் எஸ். கே. படில், ஆந்திர மாகாணத் தலைவர் ஸ்ரீ ஜுத். என். ஜி. ரங்கா, என்பவர்கள் அநேகமாக, பாபு ராஜேந்திர பிரசாத்தால் தம்காரிய நிருவாகசபை அங்கத்தவர்களாக நியமிக்கப்படலாம். இப்போது பாபு இராஜேந்திரபிரசாத் இந்திய அரசாங்கத்தில் வகித்துவரும் உணவுமந்திரிப் பதவியும் வேறொருவர்க்கு வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

○

### பம்பாய்த் தேசாதிபதி

பம்பாய்த் தேசாதிபதியாக இருந்த சேர். ஜோன். கொல்வில் தம் பதவியினின்றும் விலகி, இங்கிலாந்துக்குச் சென்றுவிட, அவ்விடத்திற்கு சேர். மகாராஜ்சிங் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் கபுர்த்தாலா அரசவம்சத்தைச் சேர்ந்தவர் ஆனால் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியபடியால், அரச குடும்பத்தாற் புறக்கணிக்கப்பட்டவர். இவர் சிலகாலம் தென்னாபிரிக்காவில், இந்திய அரசாங்கத்தின பிரதிநிதியாகவும் இருந்தவர். சமீபகாலத்தில் ஐக்கியதேச ஸ்தாபனத்தில், இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றவர். நேரு அரசாங்கத்தில் சுகாதார மந்திரியாகவுள்ள இராஜகுமாரி அமிர்தகௌரி, சேர். மகாராஜ்சிங்கின் சகோதரியாவர்.

○

### காஸ்மீரப் பிரச்சினை

காஸ்மீரம் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே இதுவரை எவ்விதமான ஒற்றுமையும் ஏற்படவில்லை. காஸ்மீரம் தன்னுடன் சேர்ந்தால்தான் தன்னுடைய பாதுகாப்புக்குப் பெலனாக விருக்கும் என்பதைப் பாகிஸ்தான் உணர்ந்து அதனைப் பெறப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. காஸ்மீரம் பாகிஸ்தானுடன் சேருவதா, அல்லது இந்தியாவுடன் சேருவதா என்னும் விஷயம், பாகிஸ்தானாலே, இந்தியாவினாலே நிர்ணயிக்கப்படக்கூடியதல்ல. காஸ்மீர மக்களே அதனை நிர்ணயிக்க வேண்டும், அப்படி நிர்ணயிக்குமுன், மக்கள் அமைதியாக வாழும் சூழ்நிலை அங்கே ஏற்படுத்த வேண்டும். அதற்கு அங்கே இப்போதுள்ள கலகமும், பட்டாணியர் படையெடுப்பும் நிற்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கூறுகிறது, பாகிஸ்தானின் உதவியுடனேயே, பட்டாணியரும் மலைநாட்டினரும் இந்த அழகிய காஸ்மீரத்தின்மீது படையெடுத்தனர் என்பதற்குப் போதிய சான்றுகள் இந்திய அரசாங்கத்திடம் உண்டு

○

### சமரசம் இல்லை

சென்ற திங்கட்கிழமை பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானும், இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் புதுடெல்லியிற் சந்தித்து காஸ்மீரப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசினர். அப்பேச்சின் பயனாகச் சமரசம் ஏற்படவில்லை லியாகத் அலிகான் கராச்சிக்குத் திரும்பிவிட்டார். காஸ்மீரப் பிரச்சினை விஷயமாக இரு அரசாங்கத்துக்குமிடையே சமரசம் ஏற்படாவிட்டால், அது ஐக்கியதேச ஸ்தாபனத்தின் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று அரசியல் வட்டாரங்களிடையே பேசப்படுகிறது இதற்கிடையில் காஸ்மீர அரசாங்கத்தைத் திருத்தியமைப்பதுபற்றிக் காஸ்மீரப் பிரதமர் ஷேயிக் அப்துல்லா ஆலோசித்து வருகிறார்.

○

### ஹைதராபாத் நிலைமை

ஹைதராபாத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே ஓர் சமரசம் ஏற்பட்டபோதிலும், அச்சமஸ்தானத்திலே சமாதானம் நிலவவில்லை. நிஸாம் தம் மந்திரசபையைத் திருத்தி அமைத்திருக்கிறார். ஆனால் அது ஓர் கண்துடைப்பாக முடிந்துவிட்டது. 100க்கு 80 விகிதமான ஹிந்துக்களுக்கு அரசாங்கத்தில் நாலு ஸ்தானங்கள் தான் வழங்கப்பட்டன 10 ஸ்தானங்கள் முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. சமஸ்தானக் காங்கிரஸ "இந்த அரசியற் சீர்திருத்தத்திற்" பங்குபற்றமறுத்து, சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து இன்னும் அதிதீவிரமாக நடாத்த நிச்சயித்திருக்கிறது. இதற்கான முயற்சிகளைச் சமஸ்தான காங்கிரஸ தலைவர் ஸ்ரீமத். ஸவாமி ராமானந்ததீர்த்தர் செய்து வருகிறார்.

## தலைமைப் பதவி



அரசாங்கத்தின் செலவினங்களையும் வரவினங்களையும் பரிசோதிக்கும் பாராளுமன்றத்துச் சபையின் தலைவராக திரு க. கனகரத்தினம் சர்வாங்கீகாரமாகச் சென்ற செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டார். குறித்த சபையின் ஏனைய அங்கத்தவர்கள் மிஸ்ரர் டபிள்யூ. தகநாயக்கா, மிஸ்ரர். பீற்றர் கெனமன், மிஸ்ர் வி ரி நாணயக்கரா, மிஸ்ரர் அல்பேர்ட் பீரிஸ், மிஸ்ரர் எச். ஆர். யூ பிரேமச்சந்திர, மிஸ்ரர் ரீ. பீ. சுபசிங்ஹ என்பவர்களாம்.

## நிராகரிக்கப்பட்டன

கியூபா தேசத்திலிருந்து சீனி தருவித்து அரசாங்கத்துக்குக் கொடுக்கக்கூடியவர்களிடமிருந்து அரசாங்கம் கேள்விப் பத்திரங்கள் கோரியது. அதன்படி 46 பேர் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தனர். அக்கேள்விப்பத்திரங்களில் ஒன்றுவது சரியில்லை என்று அவற்றை அரசாங்கம் அப்படியே நிராகரித்துவிட்டது.

கேள்விப்பத்திரம் கொடுத்தோர். சீனிக்கு அபரிமிதமான விலையைக் குறிப்பிட்டதே இப்படியான நிராகரிப்புக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

## ஜனவரி 5

இலங்கைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபைக் கூட்டம் வருகிற ஜனவரி மாதம் 5ம் திகதி வரைக்கும் தவணையிடப்பட்டிருக்கிறது.

# ஓர் குற்றச்சாட்டு

## நகரசபைத் தலைவர் பேச்சு

சென்னேற்சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ள முதலியார் ஏ. பீ. ராஜேந்திராவைக் கௌரவிப்பதற்காகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் சிறுபான்மைத் தமிழர் மகாசங்கத்தின் ஆதரவில் ஓர் கூட்டம் நிகழ்ந்தது. இளைப்பாறிய நீதிபதி திரு. வ ஆர். சுப்பிரமணியம் தலைமை வகித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரமுகர் பலர் சமுகமளித்தனர்.

கூட்டத்திற் பேசியவர்களில் ஒருவராய, யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு க பொன்னம்பலம் தமது பிரசாரணத்தில், கடந்த தேர்தலில இங்குள்ள அதிகாரவர்க்கம் நடந்துகொண்ட முறையைக் கண்டித்து, மாகாணத்தலைவரான மிஸ்ரர் பீ. ஜெ ஹட்ஸன்மீதும் ஓர்பாரிய குற்றத்தைச் சுமத்தினர். அவர் பேசியதாவது:-

"கடந்த தேர்தலிலே, யாழ்ப்பாணத்திலேயுள்ள தமிழ்க்கிளார்க்மாரும், ஏனைய அதிகார வர்க்கத்தினரும் நடந்துகொண்டமுறை அரசாங்க உத்தியோகத்தர்க்கு அடாததாகும் அவர்கள் ஓர்பக்கம் சார்ந்து வேலைசெய்திருக்கின்றனர். இந்த மாகாணத் தலைவரான மிஸ்ரர் ஹட்ஸனே நான் ஆதரித்த கட்சிக்கு மாறாக வேலை செய்தார் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது.

"நான் இதனை ஒழித்து மறைத்துக் கூறவில்லை பட்டவர்த்தனமாகவே கூறுகிறேன். ஆகவே இதுசம்பந்தமாக மாகாணத்தலைவர் தமக்கு இஷ்டமான நடவடிக்கையைக் கைக்கொள்ளட்டும்."

# பெண்களும் அரசியலும்

## ஓர் புதிய கட்சி அமைக்க முயற்சி

இலங்கையில் உள்ள படித்த பெண்கள் சிலர், ஓர் அரசியற் கட்சியைத் தாபிக்க முயற்சி செய்கிறார்கள் என்று கொழும்பு "ரைம்ஸ்" பத்திரிகை அறிவிக்கிறது. இடதுசாரிக்கொள்கையுடைய ஓர் கட்சியை புது ஆண்டுடன் இப்பெண்கள் அமைப்பாராம்.

சமசமாஜக்கட்சித் தலைவர் டக்ரர் என். எம். பெரராவின் மனைவி, சமதர்மக்கட்சித் தலைவர் டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹவின் மனைவி, டக்ரர் ராஜசிங்கத்தின் மனைவி ஸ்ரீமதி லீலாவதி முதலியோர் இபபுதிய இடதுசாரிக்கட்சித் தலைவிகளாம்.

இந்தப் பெண்மணிகளின் கணவன்மார், பரஸ்பரம் மாறுபட்ட பல்வேறு அரசியற் கொள்கைகளைக் கடைப்பிடித்தாலும், இவர்கள் அப்படி மாறுபாடின்றி ஒரே லட்சியத்துடன் ஒரே ஸ்தாபனத்தின்கீழ் நின்று வேலை செய்வராம்.

## சீனி இறக்குமதிசெய்ய

இலங்கையிலே, யுத்தகாலத்துக்குமுன் நடந்ததுபோல, தனிப்பட்ட வியாபாரிமாராகிய தாங்கள், வேற்றுநாடுகளிலிருந்து சீனி இறக்குமதி செய்ய உத்தரவு தரவேண்டுமென்று கொழும்பில் உள்ள இறக்குமதி வர்த்தகர் ஒன்று சேர்ந்து அரசாங்கத்துக்கு மனுச்செய்திருக்கிறார்கள்.

# இரு ஆலோசனைகள்

## ஸ்ரீ கனகரத்தினத்தின் கேள்விகள்

இலங்கைப் பாராளுமன்றம் ஜனவரி மாதம் 5-ம் திகதி மீண்டும் கூடும்போது தாம் பின்வரும் இரண்டு கேள்விகளையும் கேட்கப்போவதாக, வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. க கனகரத்தினம் அவர்கள் அறிவித்தல் கொடுத்திருக்கிறார்:

1. 194-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ந் திகதி பர்மாவுக்குப் பூரணசுதந்திரம் வழங்கப்படும்நாள். அந்தத் தினத்தைக் கொண்டாடி, மக்கள் குதூகலமாயிருப்பதற்காக, அங்கே (பர்மாவில்)புள்ள எல்லா அரசாங்க உத்தியோகத்தர்க்கும் ஓர்மாதச் சம்பளத்தை உபகாரப்பணமாக உதவ பர்மா அரசாங்கம் நிச்சயித்திருப்பதை எமது நிதிமந்திரி அறிவாரா? அதுபோல இலங்கையும் பிப்ரவரிமாதம் சுயராச்சியம் அடைவதையிட்டு, மாதம் 500 ரூபாவும் அதற்குக் குறையவும் பென்ஷனாகவோ, வேதனமாகவோ பெறும் அரசாங்க உத்தியோகத்தருக்காகவாவது ஓர்மாதச் சம்பளத்தை உபகாரமாகக் கொடுக்க, நிதிமந்திரியானவர், மந்திரசபையின் அநுமதியையும் இப்பாராளுமன்றத்தின் உத்தரவையும் பெற்று ஏற்றன செய்வாரா?

2. பௌத்தமதத்தைக் கைக்கொள்ளும் பர்மாநாடு, தான் பெறப்போகும் சுதந்திரத்தை உண்மையான முறையில் குதூகலமாகக் கொண்டாடும் முறையில் ஜனவரி மாதம் 3ந் திகதி தொடக்கம் 7ம் திகதி வரை எந்தவிதமான மிருகவதையும் செய்யக்கூடாது, மாமிசம் உண்ணவொண்ணாது என்று தடுக்க யோசித்திருக்கிறது எவ்வுயிரும் பராபரன் சந்நிதி என்ற பெரிய உண்மையை, கொல்லாவிரதமே குவலயத் தெல்லாம் சிறந்த விரதம் என்ற தத்துவத்தை, அன்பு, அகிம்சை, அருள், கருணை என்பவற்றை 84 நூறாயிர யோனி பேதங்கட்கும் காட்டிய புத்தபெருமானின் போதனைத் தத்துவத்தை உலகுக்கு அறிவுறுத்தவே, ஞாபகப்படுத்தவே, குறித்த மாமிச ஒழிப்பை பர்மா அரசாங்கம் கைக்கொள்ளப் போகிறது என்பதனை, இலங்கைப் பிரதமமந்திரி அறிவாரா? அப்படி அறிந்தால், 1948 ம் ஆண்டு பிப்ரவரியில் இங்கேயும் சுதந்திரவிழாக்கொண்டாட்டத்தின் பொருட்டு பர்மாவிற் செய்வதுபோல உயிர்க்கொலையைத் தடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

## பிரமாணம் திருத்த

### பாராளுமன்றத்தில் தீர்மானம்

இலங்கைச் சமசமாஜக்கட்சி அங்கத்தவர் மிஸ்ரர் பிலிப் குணவர்த்தனமீது விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை ஊர்ஜிதமாகிவிட்டது. எனவே அவர் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாது என்று பிரமாணம் கூறுகிறது. இந்த அநியாயப் பிரமாணத்தை மாற்ற வேண்டும என்று காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மத்துகமப் பிரதிநிதி மிஸ்ரர் வில்மற் பெரீரா, நியமனப் பிரதிநிதி மிஸ்ரர் இ. எப். என். கிறேஷியன் என்னும் மூவரும் சேர்ந்து பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் ஓர் தீர்மானம் எடுத்தாளப்போவதாக அறிவித்தல் கொடுத்திருக்கிறார்கள்

குறித்த சட்டப்பிரமாணம் மாற்றப்படவேண்டுமானால், பிரதிநிதிகள் சபையில் சமுகமளிப்பவர்களில மூன்றில் இரண்டு பங்கினர் சம்மதம் தெரிவிக்கவேண்டும். அப்படியான பெரும்பான்மையினர், இப்போதுள்ள பாராளுமன்றத்தில், திரு. செல்வநாயகம், வில்மற பெரீரா கட்சிக்கு ஆதரவளிப்பாரா?

### நேருவின் பர்மா விஜயம்

பர்மா வருகிற ஜனவரி மாதம் சுதந்திரமடைய விருக்கிறது. இதனையொட்டிய விழாவிற் கலந்து கொள்ளுதற்காக இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேருவும், காங்கிரஸ் தலைவர் பாபுராஜேந்திர பிரசாத்தும் வருகிற 3-1-48 இல் பர்மாவுக்குப் பிரயாணமாவார்.

### கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம்

மேற்படி சங்க 28 ம் ஆண்டுவிழா நிகழும் சர்வசித்து வருஷம் மார்கழி மாதம் (27, 28-12-47) ந் திகதிகளில் நடைபெறும்.

### அப்கானிஸ்தானத்தில் இந்தியஸ்தானிகர்

ஆப்கானிஸ்தானில் இந்திய ராஜரீகத் தூதுவராக டக்ரர் தாராசந்த் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இதுகாறும் அலகபாத் சர்வகலாசங்கத்தின் உபஅத்தியட்சகராகவிருந்து கடமையாற்றிய பேராசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி டிசம்பர் 27

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 கும்பகோணம் எஸ் சாமிநாத ஐயர் வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 கும்பகோணம் எஸ் சாமிநாத ஐயர் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைக் குறிப்பு 2 15 வைதேகி ராஜகோபாலன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 வைதேகி ராஜகோபாலன் பாட்டு 5 40 ஆண்டாள்பாசுரம் விளக்கம் 6 ஆங்கிலத்தில செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 7 15 ராணுவத்திலிருந்து திருப்பியவர்களுக்கு வசதிகள் 7 30 தமிழில் செய்திகள் 7 45 த்வாரம் வெங்கடசாமிநாயுடு வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசை விழா 10 30 முடிவு.

ஞாயிறு டிசம்பர் 28

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 எஸ கே சாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 எஸ் டி ராஜப்பா பாட்டு 9 முடிவு

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 தொழில் மாற்றம் நாடகம் 12 45 வஞ்சமகள் கவிதைக்காட்சி 12 50 மலர்க்கன்னி இசைநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி ஆர் நவநீதம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 2 45 முடிவு.

மாலை 5 மதுரை காமு அம்மாள் வீணை 5 40 தேவாரா தனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 610 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 மதுரை காமு அம்மாள் வீணை 7 15 புத்தகவிமர்சனம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 இசைவிழா 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு.

திங்கள் டிசம்பர் 29

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி பி நம்பி கம்பர் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8 30 எஸ் பத்மா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் பத்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ பத்மா பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 டி பி நம்பி கம்பர் நாகஸ்வரம் 5 30 இசைவிழா 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள்7 சித்ரகானம் இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 காப்பி ஹோட்டல் தேவையா? 8 இசைவிழா 9 ஆங்கலத்தில் செய்திகள் 9 15 எம் கே தியாகராஜபாகவதர் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு.

செவ்வாய் டிசம்பர் 30

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 ஏ பாஸ்கரகுருப் பாட்டு 8 ஆங்கிலத்தில செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 கும்பகோணம் டி பஞ்சாபகேசன் வயலின 9 முடிவு

1 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஏ பாஸ்காகுருப் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஏ பாஸ்காகுருப் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கும்பகோணம் டி பஞ்சாபகேசன் வயலின் 5 30 இசைவிழா 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7 15 காப்பி பஆசிரியர்கள் 7 30 தமிழில்செய்திகள் 7 45 தஞ்சை ஸ்ரீ லட்சுமிநாராயண பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நால்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
உரிமைத்தத்துவ வழக்கு இல 714

ஆனைக்கோட்டையி லிருந்து காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை குமரையாவுடைய ஆஸ்தியைப்பற்றிய விஷயத்தில்

ஆனைக்கோட்டை குமரையா கைம்பெண் இரத்தினம் உரிமைத் தத்துவகாரி

மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் குறித்த ஆஸ்தியாலிறுக்கப்படவேண்டிய தொகைகளை இறுப்பதற்காக 1948 ம் ஆண்டு (தை) மாதம் 31 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று என்னால் பிரசித்த வலத்தில் விற்கபடும்.

ஆதன விபரம்

ஆனைக்கோட்டை யிறை தலைழபனவாரி வைவு நிலபா 7 ஆனல்பட்டத்தின்படிநிலபா 5 ம் குளி 9 ம் பயிர்வகைகளும். எல்லை கிழக்கு றோட்டுத்தெரு. வடக்கு கட்டையன் சின்னவனின் ஆதனம், மேற்கும் தெற்கும் நாகப்பர் கந்தையாவின் ஆதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

பொ: முத்துத்தம்பி
வெந்தீஸ் கொமிஷனர்

சுதுமலை மானிப்பாய்
1947 ஆ டிசம்பர்
(மார்கழி) மீ 22உ
M 213 26

# சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

## பணம் உதவியோர் விபரம்

| | ரூ ச. |
|---|---|
| முன்கணக்குப்படி | 3544 00 |
| ஸ்ரீமான்கள் | |
| ,, V கந்தையா | 20 00 |
| ,, A C செல்லப்பா | 10 00 |
| ,, S G V N T கோபாலபிள்ளை | 100 00 |
| ,, A தில்லையம்பலம் | 50 00 |
| ,, K செல்வத்துரை | 15 00 |
| ,, Dr. K அருளம்பலம் | 5 00 |
| ,, C அருளம்பலம் | 25 00 |
| ,, S நாகேஸ்வரி | 25 00 |
| ,, M கனகரத்தினம் | 25 00 |
| ,, A முத்துவேலு | 5 00 |
| ,, S அமிர்தலிங்கம் | 5 00 |
| ஸ்ரீமதி பொ சுந்தரவல்லி (ஒரு பகுதி) | 10 00 |
| ,, பொ லெட்சுமிப்பிள்ளை | 25 00 |
| ,, வே இராசம்மா | 1 00 |
| ,, மு சிவக்கொழுந்து | 2 00 |
| ,, இ வடிவேலு | 2 00 |
| ,, நா பொன்னையா | 1 00 |
| ,, ஐ மனோன்மணி | 1 00 |
| ,, இ ராணி | 5 00 |
| ,, அ தில்லையம்பலம் | 10 00 |
| ,, S K குமாரசாமி | 3 00 |
| ,, சோ வாளாம்பி | 50 |
| ,, க சின்னம்மா | 1 00 |
| ,, த தங்கம்மா | 4 00 |
| ,, ஜெ ரங்கம்மா | 1 00 |
| ,, ச பொன்னம்மா | 2 00 |
| ,, செ ஐயாத்துரை | 1 00 |
| ,, V பரிமளம் | 2 00 |
| ,, ந வேலுப்பிள்ளை | 1 00 |
| ,, K பரமேஸ்வரி | 3 00 |
| ,, கா விசயரத்தினம் | 1 00 |
| ,, S செல்லத்துரை | 1 00 |
| ,, R சதிரவேலு | 5 00 |
| ,, க சின்னத்தம்பி | 1 00 |
| ,, க சின்னத்துரை | 2 00 |
| ,, R சோமசேகரம் | 5 00 |
| ,, அ வள்ளியம்மை | 5 00 |

| | |
|---|---|
| ,, ச காரைக்காலம்மை | 5 00 |
| ,, நா சரஸ்வதி | 1 00 |
| ,, க அன்னசத்தி | 50 |
| ,, மு தெய்வானை | 2 00 |
| ,, பொ இராசம்மா | 5 00 |
| ,, மா ஆச்சிப்பிள்ளை | 1 00 |
| ,, மு இளையதம்பி | 5 00 |
| ,, இ தையல் | 1 00 |
| ,, கா வைத்திலிங்கம் | 2 50 |
| ,, வி கு சண்முகநாதன் | 1 00 |
| ,, K M நாகலிங்கம் | 5 00 |
| ,, K M ஆறுமுகம்பிள்ளை | 3 00 |
| ,, P மகாலெட்சுமி | 2 00 |
| ,, க தங்கம்மா | 2 00 |
| ,, இராமச்சந்திரா | 5 00 |
| ,, ச தங்கம்மா | 3 00 |
| ,, R அன்னம்மா | 1 00 |
| ,, P இராமலிங்கம் | 3 00 |
| ,, A இராசையா | 10 00 |
| ,, வி கனகரட்னம் | 1 00 |
| ,, S P கனகசேகரம் | 2 00 |
| ,, மா இராசம்மா | 2 00 |
| ,, பொ சரஸ்வதி | 1 00 |
| ,, செ கனகசபாபதி | 1 00 |
| ,, K மயில்வாகனம் | 3 00 |
| ,, தம்பு | 2 00 |
| ,, V K சுந்தரம் | 5 00 |
| ,, V இராமக்கிருஷ்ணன் | 5 00 |
| ,, K தம்பிராசா | 2 00 |
| ,, பாலசுப்ரமணியம் | 5 00 |
| ,, G கார்த்திகேசு | 3 00 |
| ,, க தெய்வநாயகி | 1 00 |
| ,, நாகலிங்கம் | 2 00 |
| ,, A E சிவத்துரை | 2 00 |
| ,, S பாக்கியவதி | 2 00 |
| ,, சோமசுந்தரம் | 2 00 |
| ,, C S நடராசா | 1 00 |
| ,, K துரையப்பா | 2 00 |
| ,, வை செல்லையா | 5 00 |
| ,, சி நாகரத்னம் | 2 00 |
| ,, வ மணியம்மா | 5 00 |
| ,, முத்துவேற்செட்டி | 1 00 |
| ஆகக் கூடியது | 4039 50 |

M 215—26-12.47 24-12-47

தி. இராசநாயகம்
தனாதிகாரி

## சுன்னாகத்தில் விற்பனைக்கிருக்கும் காணிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 349 ம G இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் கிடைத்த உத்தரவுப்படி கீழே விவரிக்கப்பட் டிருப்பதும் பராயமற்ற சுந்தரம்பிள்ளை மகள் மனோன்மணிக்கும் சுந்தரம்பிள்ளை மகாலிங்கத்துக்குமுரியனவாகிய இரு காணிகளை வாங்குதற்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் காரைதீவு கிழக்கு புறக்ரர் திரு. ஆறுமுகம் கனகசபை அவர்களுக்காவது அல்லது யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு சக்கிடுத்தாருக்காவது இந்த விளம்பரத் திகதியிலிருந்து 21 நாட்களுக்கிடையில் அனுப்பப் டுதல் வேண்டும்.

ஆதன விவரம்

1 யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு உடுவிற் கோயிற்பற்று சுண்ணாகமிறை. வடுவாவத்தை நெற்பரப்பு 14 டை கெ. பா 2½ ஆகக்கூடிய செ. பா. 16½ பதினறைர கிணறும் எல்லை கிழக்கு சின்னக்குட்டி சரவணமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனகள், வடக்கு ஆசைப்பிள்ளை பெண் பொன்னுப்பிள்ளையின் பிள்ளைகளுக்குமுடைய ஆதனம், மேற்கு கதிர்காமர் கைம்பெண் பூதாத்தைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கந்தன் கணபதிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனங்கள் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி. ஆனால் குறித்த கிணற்றில் மேற்கெல்லையிலிருக்கும் ஆச்சிப்பிள்ளையின் உரித்தாளருக்குரிய காணிக்கு தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்து பிறநீக்கலாக.

2 டை சுண்ணாகம் இறை சிவிளாளையும் பூதிவிளாத்தியடியும் நெற்பரப்பு 8¼ எட்டேகால் எல்லை கிழக்கு சின்னக்குட்டி சரவணமுத்துவின் ஆதனம் வடக்கு குவமும் கதிர்காமர் தம்பரின் உரிமைக்காரரின் ஆதனமும் மேற்கு சொல்லப்பட்ட தம்பரின் உரிமைக்காரரின் ஆதனமும் சுண்ணாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஆதனமும், தெற்கு ஆசைப்பிள்ளை பெண் பொன்னுப்பிள்ளையின் பிள்ளைகளுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனங்கள் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

ஒப்பம். ஆ கனகசபை
Sgd: A Kanagasabhai
பராபரிப்புத் தத்துவ வழக்கில்
பராபரிப்புத் தத்துவகாரனின்
புறக்ரர்
காரைதீவு கிழக்கு
1947 ஆ மார்கழி மீ 15உ
M 210 26, 30,

## யாழ்ப்பாணத்தில் தண்ணீர்வசதி

முதலாம் பக்கத் தொடர்ச்சி

றன, கான்கள் அழுக்கோடு கூடியிருக்கின்றன. நகரசுத்தி வேலை ஒழுங்காய்க் கிரமமாய் இல்லை; ஒழுங்கைகளில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருக்கிறது என்றெல்லாம் பட்டினவாசிகள் குறை சொல்லுகிறார்கள் இந்த விஷயங்களை எல்லாம சரிப்படுத்திப் பூர்த்தியாக்க, நகரசபையிடம் போதிய வருவாயில்லை. மற்றுமிடங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் தான் இறைமதிப்புவரி மிகவும் குறைவாக அறவிடப்படுகிறது இந்த வரி விகிதத்தை அதிகரிக்க, அங்கத்தவர்கள் பயப்படுகிறார்கள். அப்படிக்கூட்டினால், ஊரவர்கள் தம்மேற் கோபிப்பார்கள், அடுத்தமுறை தேர்தலுக்கே முன்வர முடியாது என்றெல்லாம் அவர்கள் அஞ்சவேண்டியிருக்கிறது. ஆகவே, வரியிறுப்போர் தங்களுக்கு இன்னும கூடிய சௌகரியஙகள வேண்டுமென்றால், வரியைக் கூட்டும்படி தங்கள் தங்கள் வட்டாரப் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

சிங்கப்பூர்——பினங்

# கப்பல் பிரயாண வசதிகள்

நாகபட்டினம் அல்லது மதருஸ் மார்க்கம்

தற்போது எங்கள் பார்ட்டிகளை அவர்கள் விருப்பப்படி நாகபட்டணம் அல்லது மதருஸ் இரு துறைமுகங்கள் மூலமாகவும், மற்றவர்களிலும் பார்க்க மிகவும் குறைந்தசெலவில் கப்பலேற்றி வைக்கிறோமென்பதை எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

முதல்தரமான பிரயாண வசதிகள்! உன்னதமான சாப்பாடு!!
தங்குமிட வசதிகள்! இருவாரங்களுக்கொரு கப்பல்!!

எங்கள் கடந்தகால சேர்விஸ் பலராலும் போற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணமிருந்து பினங் மதருஸ் மார்க்கம் ரூ. 150
,, ,, நாகபட்டணம் ,, ரூ. 130

மேற்படி இரு சேர்விஸ் ளுக்கும் யாழ்ப்பாணமிருந்து மூன்றாவது வகுப்பு றெயில்வே பிரயாணமும் சாப்பாடு, தங்குமிடம் லக்கேச் முதலிய சாமான்களும் ஸ்டீமரில் கொடுக்கும் செலவு யாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

உங்கள் பணத்திற்கும் பாதுகாப்பிற்கும் நம்பிக்கையான இடம்

பிராஞ்சு: நாகபட்டணம். மதறாஸ்.
தந்தி விலாசம்: "சிறீவேல்" புரோப்ரைட்டர்: A. I. காசிலிங்கம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறை றோட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்

Std 3 1—9—47&28-2 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் பலவிதக் கதை

"எடுத்துரைக்க வென்ருல் ஏடு இடங்கொடாது"

அக்கடிதம் பின்வருமாறு:

"எனது அன்பார்ந்த மைத்துனரவர்களுக்கு ஆதரவுடன் எழுதிக்கொள்வது, எல்லாம்வல்ல இறைவனுடைய திருவருளால் நான் இன்னமும் இவ்வுலகத்திலே தான் இருக்கிறேனென்பதை அறியும்போது நீங்களெல்லீரும் மகிழ்ச்சியடைவீர்கள்; உங்கள் சுகத்தையும் எனது மாமியார் சுகத்தையும் உங்கள் சகோதரியின் சுகத்தையும் அறிதற்கு அதிக ஆவலாயிருக்கிறேன்; என்னுடைய வரலாற்றை யெடுத்துரைக்க என்றால் ஏடு இடங்கொடாது, எழுதுங் கை அலுப்படையும், மேலும் என் வரலாறு படிப்போரேவருக்குந் தீராக்கவலை கயத் தேடிவிடும்: ஆனதினல் உங்களை நான் நேரிற் காணும்பேறு கிடைக்கும்போது, உங்களுக்கு விபரமாகச் சொல்லுவேன்; சில தினங்கட்கு முன்னர் என் அருமைப் பெற்றருக்கும் ஒரு தேறுதலான கடிதமெழுதியிருக்கிறேன். அக்கடிதம் இற்றைவரையில் அவர்களுக்குக் கிடைத்திருக்குமோ இல்லையோ என்பதைப்பற்றி யறியேன்; இக்காலத்திற் கடிதப்போக்குவரவுகளின் ஒழுங்குகளைப்பற்றி எனக்குத் தெரியாது.

நிற்க, உங்கள் தாயாரும் சகோதரியும் ஊரிலிருந்து உவ்விடம் வந்திருக்கிறர்களென்பதைச் சிலவாரங்கட்கு முந்தித்தான் அறிந்தேன்; அப்படியறிந்தேனுயினும் உங்கள் சரியான மேல்விலாசத்தை அந்தநேரத்தில் அறியமுடியவில்லை; பிந்தித்தான் அறிந்து இக்கடிதத்தை உங்களுக்கு எழுதலானேன். உங்கள் எல்லீர் சுகத்தையும் அறிய ஆவலாயிருக்கிறேன்; இக்கடிதத்தின் மேற்புறத்தில் எழுதியுள்ள விலாசத்தின்படி எழுதுவீர்களானல் உங்கள் கடிதம் என்னிடம் வந்து சேரும் ஆனலும் கடித விஷயங்கள் இயன்றவரையில் இரகசியமாக இருப்பது நல்லது. இங்ஙனம்,

உங்கள் அன்பை மறவாத,
**வி. நமசிவாயர்.**

தங்கள் மைத்துனர் தங்களுக்குக் கடிதம் எழுதிய உவகையோடு கூடிய செய்தியைச் சிவபாக்கியம் கடிதமூலமாக, பாக்கியலட்சுமிக்குத் தெரிவிக்க, பாக்கியலட்சுமி பெருஞ் சந்தோஷமடைந்து, தன் கணவனுக்கும் தனபாக்கியத்திற்கும் பின்னர்ச் சாமியாருக்கும் தெரிவிக்க, அவர்களும் பெருமகிழ்ச்சி யடைந்தனர்: பாக்கியலட்சுமி இங்ஙனந் தெரிவித்துவிட்டு, சிவபாக்கியத்திற்கும் சிவகுருநாதனுக்குங் கண்ணகியம்மைக்குமர், அச்செய்தி தங்களுக்குப் பெருஞ் சந்தோஷத்தைத் தந்ததென்று கடிதமெழுதினுள்: சிவகுருநாதன் தங்கள் மாமனாகிய விநாயகமூர்த்திக்கும் அவர் மனைவிக்கும் அவர்களுடைய மகன் தங்களுக்குக் கடிதமெழுதிய செய்தியைத் தெரிவித்திருந்தான் சிவகுருநாதன் தன் மைத்துனனுக்கும் ஒரு பதில் எழுதியிருந்தான்; அக் கடிதத்தில் யுத்தந் தொடங்கிய பின்னர்த் தனக்கு நேர்ந்த கஷ்டங்களையும், யுத்தம் முடிந்தபின்னர்த் தான் பழையபடி உத்தியோகத்தில் அமர்ந்திருப்பதையும் தமது தாயாருஞ் சகோதரியும் தன் வாசஸ்தானத்திற் சில மாசங்களாக வந்து வசிப்பதையும், மைத்துனனுகிய அவனைக் காணுமையால் எல்லாருங் கவலைப்பட்டதையும், கடிதங் கிடைத்தபின் சிறிது தேறுதலடைந்திருப்பதையுமாகிய எல்லாவிபரங்களையும் அக்கடிதத்தில் எழுதியிருந்தான். (வரும்)

பண்டிதர்

## ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

# அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிதி

நமது பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற மார்கழி மீ கஉ (27-12-47) சனிக்கிழமை திருவருளைமுன்னிட்டு நடத்தநிச்சயித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணுக்கர்கள் அபிமானிகளாயுள்ளாரனைவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம்உதவுக. மேலும் பணம்உதவும்அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி, திரு. S. P. கந்தையா அவர்கள் மேற்படி நிதித் தனதிகாரி, இந்துசாதனலயம், வண்ணார்பண்ணை என்னும் விலாசத்திற்கு அனுப்புக. பணமுதவுவோரின் பெயர், விலாசம், பணத்தொகை முதலியன இந்துசாதனத்தில் வெளிவரும்,

☞ மேற்படி விழா நிகழ்ச்சிப்போது அபிமானிகளனைவரையும் தவருது சமுகஞ்செய்து விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கிறேம்.

திருவாளர்கள்:

| | ரூ. ச. |
|---|---|
| முன் கணக்குப்படி | 1457 00 |
| முதலியார் சி. முத்துத்தம்பி, ஆனைப்பந்தியடி யாழ்ப்பாணம் | 10 00 |
| K. ஐயாத்துரை, வழக்கறிஞர் நீராவியடி யாழ்ப்பாணம் | 5 00 |
| | 1472 00 |

கா. கந்தையா,
தலைவர்.

க. சி. சுப்பிரமணியம்,
காரியதரிசி.

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை


காணி விற்பனவு பற்றிய

## கேள்விப் பத்திரங்கள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 324 G இல. வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி வண்ணார்பண்ணை மேற்கு எம். எ. கந்தையாவின் பராய மடையாத பிள்ளைமனேன்மணிக்குச் சொந்தமான பின்வரும் ஆதனங்களை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் இத்தாற் கோரப்படுகின்றன.

குறித்த மூன்று காணிகளையும் அல்லது அவற்றில் ஒவ்வொன்றையேனும் வாங்க விரும்புவோர் தம் கேள்வித் தொகையை 'சீல்'பண்ணப்பட்ட உறையுள் குறித்து யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுச் சக்கிடுத்தாருக்கு அல்லது ஷை வழக்குத் தத்துவகாரனின் பிறக்ராருக்கு இந்த விளம்பரம் வெளிவந்த 21 நாட்களில் அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களில் எவற்றையேனும் கிராகரிக்க நீதித்தலத்துக்கு உரிமை யுண்டு.

ஆதன விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கில் 'பிள்ளையான் வளவு'' என்னும் ஆதனம் நிலப்பரப்பு 1-ம் $13\frac{1}{2}\frac{9}{0}$ குளியும் வீடு, செய்பயிர் வான்பயிர்களும், மேற்குப்பக்க எல்லையில் இருக்கும் காணியில் உள்ள கிணற்றுத் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு சின்னட்டிப்பிள்ளை பொன்னம்பலத்தி ஞதனம், வடக்கு ஒழுங்கையும் கார்த்திகேசு கைம்பெண் அன்னபூரணம் மாளின் உரிமைக்காரரி ஞதனமும், மேற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைய் ஞதனம், தெற்கு வெங்கடாசலம் பெண் பறுபதம்மாவின் ஆதனம்.

2. ஷை மாகாணம், ஷைடிஸ்திறிக் ஷை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்கு 'மணற்காடும்'' என்னும் ஆதனமும் அதனைச் சேர்ந்தவைகளும் நிலப்பரப்பு 3 கிணறும், எல்லை கிழக்கு ஆறுமுகம் கந்தையாவி ஞதனமும், மாணிக்கம் கைம்பெண் நாகம்மாவி ஞதனமும், வடக்கு முருகர் செல்லரும் மறுவும், மேற்கு சபாபதி கைம்பெண் அன்னமுத்துவி ஞதனம், தெற்கு சின்னர் சின்னத்தம்பியி ஞதனம், ஒழுங்கை முகப்பு, பொன்னர் வேலுப்பிள்ளையி ஞதனம்.

3. ஷை மாகாணம். ஷை டிஸ்திறிக் ஷை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்கு "பிரமகாரியப்பிள்ளைப்புலம்" நிலப்பரப்பு 4, கிணறும் செய்பயிர் வான்பயிர்களும், கிழக்குப் பக்கத்துக்கு எல்லைக்காரருக்குச் சொந்தமான கிணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் புறநீங்கலாக, எல்லை கிழக்கு செல்லர்பெண் வள்ளிம்மையி ஞதனம், வடக்குக் கையொழுங்கை மேற்கு. கதிரவேலு இரத்தினத்துக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம் தெற்கு செல்லர் பொன்னம்பலத்தின் ஆதனம் கையொழுங்கையில் பங்கு உண்டு.

194/-ம் ஆடு டிசெம்பர்மீ 18உ.

M. K. சுப்பிரமணியம்,
பிறக்ராரும், நொத்தாரிசும்,
வட்டுக் காட்டை,
ஷை 324 G. வழக்கில் தத்துவகாரனின் பிறக்ரார்.

Mis. 212, 26-12-47.



ஸ்ரீமுனிஸ்பரன்துணை

யாழ்ப்பாணம்
கோட்டை ஸ்ரீ முனிஸ்வரப்பெருமான்
திருவெம்பாவைத்
திருவுலா

## விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

நிகழும் சர்வசித்துஹு வருஷம் மார்கழிமீ ௩௨ (19 12-47) வெள்ளிக்கிழமை தொடங்கி யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் கோவில் திருவெம்பாவைப் பூஜை ஆரம்பமாகும். அன்று முதல் 10 நாட்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், ஆரவு மேளக் கச்சேரிகளும், சங்கீதக்கச்சேரிகளும்நடைபெறுகின்றது.

அத்தருணம் அன்பர்கள் யாவரும் வந்து ஸ்ரீமுனீஸ்வரப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ஷை கோவில் சொந்தக்காரர்.

Mis. 207, 20—26 12.47.


## சிதம்பரதரிசனம்

"சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் சிதம்பரமே மேலானது. இந்த ஸ்தலத்திற் கனகசபையின்கண்ணே கருணைநிதியாகிய சபாநாயகர் செய்தருளும் ஆனந்த திருத்தத்தை மெய்யன்போடு தரிசித்தவர் முத்திபெறுவர் அது "மெய்மைநற் சரியை பத்தி விளங்கிய ஞானமேவா, வெம்மையொப்பவர்க்கு முத்தி யிறையிலியாகவிட்ட,மும்மைநற் பதிகடம்மின் முளைத்தவர் முடிந்தோர் மூவாச், செம்மலர்க்கழல் கண்டோர்கள் சிவத்தினைச் சேர்வரன்றே."

"பிறந்தில மாரூர் தன்னிற்
பேசிய காசிமேவி
யிறந்தில மிரண்டு முத்தி
யின்பமும் பின்பதாநாம்
உறைந்திடுந் தில்லைஞான
யோகமார் தானமாமாற்
செறிந்தடி காணச்சிவன்
மூத்தாய்த் திரியலாமே."

என்னும் கோயிற்புராணத்து வியாக்கிரபாத மகாமுனிவர் இரணியவன்ம சக்கரவர்த்திக்கு உபதேசித்த பொருளையுடைய திருவிருத்தங்களால் உணர்க.

"பறையிடமா நின்றுமிரு
பஞ்சாக் கரத்தா
லுரையுணர்வுக் கெட்டா
வொருவன்—வரைமகடான்
காணும்படியே கருணையுருக்
கொண்டாடல்
பேணுபவர்க் குண்டோ பிறப்பு'

என்னும் உண்மைவிளக்கத் திருவெண்பாவானும் உணர்க.

பல சிவஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் திருப்பணி செய்ததலை தொழிலாகக் கொண்ட திருநாளைப்போவார் நாயனருக்குச் சிதம்பர தரிசனத்திலே வேட்கை மிக்குற்றது. இவ்வேட்கையின் மிகுதி அது விளைந்த அன்றிரவு இவருக்கு நித்திரை இன்மையானும், மற்றநாள் இவர் தாம் தில்லைக்குச் செல்லின் கோயிலினுள்ளே புகுதல் தமது சாதிக்கு ஆகாமையாது என்பதை நினைந்து, போகாதொழிந்தாரெனினும், அவ்வாசை குன்றது மேன்மேலும் வளர்தல்பற்றி நாளைப்போவேன் நாளைப்போவேன என்று பலநாள் கழித்து, ஆசையை அடக்கல் கூடாமையால் பின் தில்லையின் எல்லையை அடைந்தமையானும், தெளியப்படும். இவ்வாறு மிக்க ஆசையுடன் சென்றும், தில்லையினுள்ளே வேத விதிப்படி ஓமம் செய்யப்படுதலைக் கண்டு, உட்புகா தொழிந்து, இராவுபகல் திருவெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால், வேதாகம விதிக்கு அஞ்சி, சாதிநெறி கடவாது நின்ற இவரது பெருந்தன்மை துணியப்படும். பின்னும் இவருக்குச் சிதம்பரதரிசனத்தில் ஆசைகுன்றது மேன்மேலும் வளர்ந்தமை பெருவியப்பாமே! இவ்வாறே சிவனிடத்து இடையறுது மேன்மேலும் பெருகும் மெய்யன்பினுல் வளர்ந்தோங்கிய ஆசையினையுடைய, கருணைநிதியாகிய நடேசர் இவர்கருத்தை முற்றுவித்தருளத் திருவுளங்கொண்டு, தில்லை மூவாயிரவரைக் கொண்டு திருமதிற்புறத்திலே திருவாயிலுக்குமுன் அக்கினி வளர்ப்பித்து, இந்நாயனரை அதிலே புகுவித்து, இவர் புலை உடம்பை ஒழித்துப் பிராமணமுனி வடிவங்கொண்டு எழுந்து கனகசபையிற் புகுந்து தமது திருவடிகளை வணங்கிக் கொண்டிருக்கும் பொருட்டு அருள்செய்தார். இதனல் சிவன் தம்மை வழிபடும் அடியார்களது கருத்தை முடித்தருளுவர் என்பது துணியப்படும்.

—நாவலரவர்கள்.

## பெற்றோர் தின விழா

நிகழும் சர்வசித்து வருஷம் மார்கழி மாதம் ௩ந் திகதி (18-12-47) வியாழக்கிழமை மாலை ஆறரை மணியளவில் அநுராதபுரம் விவேகானந்த சபையாரால் நடத்தப்படும் விவேகானந்த வித்தியாலயத்தில் பெற்றோர்தினக் கொண்டாட்டம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பெற்றோரும் மற்றோருமாகப் பல அபிமானிகள் சமுகளித்திருந்தனர். யாழ்ப்பாண சைவாசிரியகலாசாலைத்தமிழ்ப்பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களும் அன்றைய கொண்டாட்டத்திற்குச் சமுகமளித்துச் சொற்பொழிவாற்றினர். மேற்படிசபைத் தலைவர் திரு. V. இராமசுவாமி J. P U. M. அவர்கள் தலைமையில் முதலில் வித்தியாலய மாணவரொருவரின் தேவார பாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் பெற்றோர்தினக் கொண்டாட்ட வைபவத்தைப் பற்றி முன்னுரை சில கூறியபின்னர் தலைமையாசிரியர் திரு. சி. அருளம்பலமவர்கள், பெற்றோர்தினக்கொண்டாட்டத்தின் அவசியத்தைப்பற்றியும், பெற்றோருக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்பைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினர். பாடசாலைச் சூழல்களைப்பற்றி நன்கறிந்த உத்தம ஆசிரியர்களினதும், பெற்றோர்களினது ஒத்துழைப்பும் நெருங்கிய அந்நியோந்நிய தொடர்புமே பாடசாலை முன்னேற்றத்திற்கு அடிப்படையான காரணமாகும் என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டினர். பின்னர் வித்தியாலய பாலர்களினது நடனங்கள் பாட்டுக்கள் விளையாட்டுக்கள் நடைபெற்றன. பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளையவர்களும் ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினர்.

—கடித

## ரமண ஜெயந்தி

நாவலப்பிட்டி இந்துவாலிபர்சங்க ஆதரவில் 29-12-47 திங்கட்கிழமை பிற்பகல் 6 மணியளவில் கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் ஷை ஜெயந்தி கொண்டாடப்படும் என்று மேற்படிசங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கர்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std.29 1-8—30 7-48)

---

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய

## பிரதமவகுப்பு நூல்கள்

1 நாலாந்தரப் பூமிசாத்திரம் ( 7-ம் பதிப்பு ) விலை சதம் 80
2 ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் ( 5-ம் பதிப்பு ) விலை ரூபா 1
3 நாலாந்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 35
4 ஐந்தாந்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 50
5 இரண்டாம் மூன்றாந்தரக் கணிதங்கள் ( அச்சில் )
விரைவில் வெளிவரும்

☞ புதியபாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கில பாடசாலைகளில்கல்விபயிலும் தமிழ்ச்சிறுார்களுக்கும் உகந்தபாடப்புத்தகங்களாகும்.

வட இலங்கா புத்தகசாலை
பெரியதெரு, பருத்தித்துறை

---

## மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

சென்னபட்டணம் மார்க்கம் செல்வதற்கு வசதிகள் ஆரம்பமாகிவிட்டது.
யாழ்ப்பாணம் சென்னபட்டணம் பிறுங் ரூபா 170
(றெயில் 3-ம் வகுப்பு கப்பல் டெக்)
நாகபட்டணம் மார்க்கம் செல்வோர் ரூபா 115

**வசதிகள் முன்போற் குறைவின்றிப்பெற்றுக்கொள்ளலாம்**

விபரம் நேரில்:

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
(வின்சர் — வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்)
கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம் நாகபட்டணம்
Std 22. 6-6-47—6-6-48

---

## திருவருட்பயன்

**சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)**

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்குச் சமய பாடமாக விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அணு 12 )

**திருக்குறள்** முதல் 20 அதிகாரம்

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழி பெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றுடன்

விலைசதம் 75 (அணு 12)

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும், பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

---

## இலக்கிய வாசகம்

மூன்றும் புத்தகம்

**நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது**
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**
சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

**செய்யுட் பாகம்**
பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக் கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதி ஒன்று விலை சதம் 60 (அணு 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்

---

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—1—48

---

## தந்தரோக சஞ்சீவி

**கந்தசாமி வைத்தியர்**

**சந்தனுதித் தயிலம்**

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30 6.48 ( வெ )

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday December 26, 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org